RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 105 | ஏப்ரல்.22 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது தமிழகம்” பழனிசாமி காட்டம்

சென்னை: ஏப்.22-

“ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி விட்டனர்” என கடுமையாக விமர்சித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ வெளியிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் நிலையில், அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. இன்று மாலையுடன் பிரச்சாரம் முடிவடைய இருக்கும் நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோ பதிவில், “வாக்குரிமை நம் தலையெழுத்தை மாற்றும் ஜனநாயக ஆயுதம். வருகிற 23 ஆம் தேதி நாம் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.



ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி விட்டனர்.

சட்டம் ஒழுங்கு அடியோடு சீர் கெட்டுவிட்டது. பெண்களுக்கு எங்கேயும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. உயர் கல்வித் துறையை சீரழித்து விட்டனர். சந்து பொந்துகளில் எல்லாம் கஞ்சா போதை பொருட்களை விற்று மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டனர். இந்த அராஜக, குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட உங்கள் வாக்கு தேவை.

குடிமராமரத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை மீட்டெடுத்தது, அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கியது, அம்மா உணவகம், அம்மா மினி கிளினிக் என பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றியது அதிமுக அரசு.

இந்த மக்கள் நல திட்டங்கள் மீண்டும் தொடர வேண்டும். சிறப்பான நமது தேர்தல் அறிக்கையின் மூலம் வளமான ஒரு எதிர்காலத்தை தமிழகத்துக்கு வழங்க இருக்கின்றோம். அதன் மூலம் தமிழகம் இன்னும் முன்னேற்றப் பாதையில் செல்லும். அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அதிக வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெறும்” என்று பழனிசாமி பேசியுள்ளார்.

---

## ‘பதைபதைக்கச் செய்கிறது தி.மலை சம்பவம்... பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை’ நயினார் நாகேந்திரன்

சென்னை: ஏப்.22-

‘தமிழகத்தை சீரழித்த திமுக ஆட்சியில் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது. பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்டது திமுக ஆட்சி’ என திருவண்ணாமலை சிறுமி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆவேசமாக கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள திருவண்ணாமலைக்கு வந்திருந்த 15 வயது சிறுமியை 8 பேர் கொண்ட கும்பல் கூட்டுப் பாலியல் வன்கொடுமை



செய்திருப்பதாக வெளிவந்துள்ள தகவல் மனதை பதைபதைக்கச் செய்கிறது.

புண்ணிய பூமியான திருவண்ணாமலையில் தரிசனம் செய்ய வந்த இளம்பெண்ணை அவரது தாய் முன்பே இரு காவலர்கள் வன்கொடுமை செய்த ரணம் மனதை விட்டு ஆறும் முன்பே, மற்றொரு கொடூரம் அரங்கேறி இருப்பது திறனற்ற திமுக ஆட்சியால் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது.

பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்ட திமுக ஆட்சிக்கு நாளை மறுநாள் தமிழக மக்கள் முடிவுரை எழுதுவர். தேசிய ஜனநாயக கூட்டணியைத் தேர்ந்தெடுத்து தமிழகத்தை மீட்டெடுத்து காப்பர்’ எனத் தெரிவித்துள்ளார்

---

## “மு.க.ஸ்டாலின், மம்தா அரசுகள் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்” பியூஷ் கோயல்

புது டெல்லி, ஏப்.22-

“தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் அரசியல் காற்று மாறி விட்டது. ஸ்டாலின் மற்றும் மம்தா பானர்ஜி அரசுகளின் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்” என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.புது டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தின் முதல் கட்டத் தேர்தல்களுக்கு இன்னும் மூன்று நாட்களே உள்ளன. மிகத் தெளிவாகச் சொல்வதானால், இவ்விரு மாநிலங்களிலும் அரசியல் காற்று மாறிவிட்டது. ஸ்டாலின் மற்றும் மம்தா பானர்ஜி அரசுகளின் பெருமளவிலான ஊழல்களும், இவ்விரு மாநிலங்களிலும் சீர்குலைந்து வரும் சட்டம் ஒழுங்கு நிலையும், மக்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளன.

அண்டை நாடுகளிலிருந்து நடைபெறும் ஊடுருவல் என்பது வாக்காளர்களின் முக்கிய கவலையாக இருக்கிறது. இதுவே



வரவிருக்கும் மேற்கு வங்க தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை இழக்க வழிவகுக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும்.

2029 மக்களவைத் தேர்தல் மற்றும் அதற்குப் பிந்தைய தேர்தல்களில், நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டைப் பெற ஆவலுடன் காத்திருக்கும் இந்தியப் பெண்களின் நலன்களுக்கு காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக ஆகிய கட்சிகள் ஊறு விளைவித்துள்ளன. நமது சகோதரிகள், மகள்கள் மற்றும் ஒட்டுமொத்த இந்தியப் பெண்களும் நாட்டின் அரசியலில் தங்களுக்குரிய நியாயமான பங்கை பெற வேண்டும் என்பதில் பிரதமர் மோடி மிகுந்த உறுதியுடன் உள்ளார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, காங்கிரஸின் காந்தி குடும்பம், மேற்கு வங்கத்தின் மம்தா பானர்ஜி குடும்பம் மற்றும் தமிழ்நாட்டின் ஸ்டாலின் குடும்பம் ஆகியவை இந்தியப் பெண்களை முழுமையாக ஏமாற்றிவிட்டன. தொகுதி மறுவரையறை குறித்த விவகாரத்தில் நாங்கள் 50 சதவீத இடங்களை விகிதாச்சார அடிப்படையில் அதிகரிக்கத் திட்டமிட்டிருந்தோம். இதன் மூலம் மாநிலங்களுக்கு இடையே எவ்விதப் பாகுபாடும் இன்றி, ஒவ்வொரு மாநிலமும் சம விகிதத்திலான இடங்களைப் பெறும் வாய்ப்பு உருவாகியிருக்கும். திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு எதிரானவர். தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு தற்போது உள்ள அதே விகிதாசார இடங்களை நாங்கள் தொடர்ந்து பராமரிப்பதை அவர் ஏன் விரும்பவில்லை?” என்றார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

---

## “இது பெண்கள் மீதான வன்மம்...” முதல்வர் ஸ்டாலின் மீது அன்புமணி சாடல்

சேலம்: ஏப்.22-

“பிரதமர் மோடி கொண்டு வந்த மகளிர் இடஒதுக்கீடு மசோதா நகலை, முதல்வர் ஸ்டாலின் எரித்தது, பெண்கள் மீதான அவரது வன்மத்தை காட்டுகிறது” என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் விமர்சித்துள்ளார்.

சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்துகொண்டு பேசினார்.

இந்தக் கூட்டத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசியது: ”தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. அமெரிக்காவில் கிடைக்கக் கூடிய அத்தனை போதை மருந்துகளும் தமிழ்நாட்டில் தாராளமாக கிடைக்கின்றன. இதனால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. தமிழகத்தை அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோர் ஆட்சி செய்தபோது ஒரு குழந்தை கூட வன்கொடுமைக்கு ஆளானது இல்லை. ஆனால் திமுக ஆட்சியில் பச்சிளம் குழந்தைகளும் பெண்களும் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

திமுகவின் கடந்த 5 ஆண்டு ஆட்சியில், 369 குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு



ஆளாகி கொலை செய்யப்பட்டனர். ஐந்து ஆண்டில் 2,100 பெண்கள் வன்கொடுமை கொலை செய்யப்பட்டனர். ஐந்தாணடில் 8,700 பேர் கொலை நடந்துள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு 62 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் போக்சோ வழக்குகள் மட்டும் 27 ஆயிரம்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்காக 44 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,280 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால் இது எதுவுமே முதல்வருக்கு தெரியாது. அவர், விளம்பரப் படத்தில் நடித்துவிட்டு சென்றுவிடுவார். எனவே பெண்களுக்கு, விவசாயிகளுக்கு பாதுகாப்பு கிடைக்க, நல்லாட்சி நடந்திட ஒரு விவசாயியாக இருக்கும் எடப்பாடி பழனிசாமியை முதல்வராக தேர்ந்தெடுங்கள்.

பெண்களின் முன்னேற்றத்துக்காக, மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை பிரதமர் மோடி கொண்டு வந்தார். ஆனால் அந்த மசோதாவை முதல்வர் ஸ்டாலின் எதிர்த்து, சட்ட நகலை எரித்தார். இது பெண்களுக்கு எதிரான அவரது வன்மத்தை காட்டுகிறது.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழகத்தில் எம்எல்ஏக்களின் எண்ணிக்கை 351ஆக அதிகரித்திருக்கும். அதில் 117 பெண்கள் எம்எல்ஏவாக ஆக வாய்ப்பு கிடைத்திருக்கும். எம்பிக்கள் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்து, அதில் 20 பெண்கள் எம்.பி.க்களாக வாய்ப்பு கிடைத்திருக்கும். பெண்கள் படிக்கக் கூடாதா? எம்எல்ஏ., எம்பி., ஆகக் கூடாதா ? ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடாதா? அவரது தங்கை மட்டும் தான் எம்.பி. ஆக வேண்டுமா?

தமிழகத்தில் பதிவாகியுள்ள தபால் ஓட்டுக்களில் 90% அதிமுகவுக்கு ஆதரவாக இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இது அரசு ஊழியர்கள் திமுக அரசுக்கு எதிராக இருப்பதை உணர்த்துகிறது.

ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சியில் 238 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியின்போது தமிழகத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரியில் கொண்டுவரப்பட்டன ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி கூட கொண்டு வரப்படவில்லை.

எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியின்போது, பாமகவின் 30 ஆண்டு கால கோரிக்கையான மேட்டூர் உபரி நீர் திட்டம் முதல் கட்டமாக செயல்பாட்டுக்கு வந்தது. அத்திக் கடவு அவினாசி திட்டம் கொண்டுவரப்பட்டது, காவிரி குண்டாறு திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் திமுக ஆட்சியில் காவிரி குண்டாறு இணைப்பு திட்டத்திற்கு ஒரு ரூபாய் கூட நிதி ஒதுக்கவில்லை.

தமிழகத்தில் ஒரு நீர்ப்பாசன திட்டம் கூட புதிதாக செயல்படுத்தப்படவில்லை. எனவே, மக்கள் விரோத திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். இரண்டு வாரத்தில் தமிழக முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி வருவார். தமிழகத்தில் நல்லாட்சி மலரும்” என்று அன்புமணி கூறினார்.

---

## ஸ்டாலின் மீதான ராகுல் காந்தியின் கோபம் தீரவில்லை: தமிழக பாஜக கருத்து

சென்னை, ஏப்.22-

“திமுகவினர் மன்றாடியதால் பிரச்சாரத்தில் போனால் போகிறது என்று ஸ்டாலின் பெயரை குறிப்பிட்ட ராகுல், ஸ்டாலினை முதல்வராக்குங்கள் என்று ஒரு இடத்தில் கூட சொல்லவில்லை” என தமிழக பாஜக விமர்சித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழக சட்டப்பேரவை தேர்தல் பிரசாரம் இன்று முடிகிறது. அதிமுக, பாஜக, பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் அமோக ஆதரவு அளிப்பது பிரசாரத்தில் கண் கூடாகப் பார்க்க முடிகிறது.

பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, மத்திய தொழில்துறை அமைச்சர் பியூஸ் கோயல், மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்தனர்.

சென்னை, மதுரை, திருச்சி, நாகர்கோவில், கோவை என பிரதமர் மோடி பிரச்சாரம் செய்த அனைத்து இடங்களிலும் அதிமுக பொதுச் செயலர் பழனிசாமி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த ஒற்றுமை களத்திலும் எதிரொலித்து வருவதால் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி உறுதியாகியுள்ளது.

திமுகவுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி விரும்பவில்லை. ஆனால், இடைத்தரகர் ப.சிதம்பரம் வாயிலாக, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை பிடித்து குறுக்கு வழியில் காங்கிரஸுடன் திமுக தலைவர் ஸ்டாலின் கூட்டணி அமைத்தார்.

ஆனாலும் ராகுல் காந்தியின் கோபம் தீரவில்லை. அதனால்தான், கடந்த 18ம் தேதி, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருச்சி மாவட்டங்களிலும், 20ம் தேதி தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ராகுல் காந்தி பிரச்சாரம் செய்தார். ஆனால், எங்கும் திமுக தலைவர் ஸ்டாலின் உடன் இருக்கவில்லை.

பொன்னேரியில் பிரச்சாரத்தை துவக்கிய ராகுல் காந்தி தனது முதல் உரையில் திமுக தலைவர் ஸ்டாலின் பெயரையே குறிப்பிடவில்லை. அதன்பிறகு போனால் போகிறது என்று திமுகவினர் மன்றாடியதால் ஸ்டாலின் பெயரை குறிப்பிட்டாலும், ஸ்டாலினை முதல்வராக்குங்கள் என ஒரு இடத்தில் கூட சொல்லவில்லை.

கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும், திமுக தலைவர் ஸ்டாலினும் இணைந்து பிரச்சாரம் செய்தனர். ஆனால், ஸ்டாலின் பேசிக் கொண்டிருக்கும் போதே, வேலை இருக்கிறது எனக்கூறி பாதியிலேயே கார்கே வெளியேறி விட்டார். தனக்கு தானே சர்வாதிகாரி என அறிவித்துக் கொண்ட ஸ்டாலினுக்கு காங்கிரஸ் அளித்த மரியாதை இதுதான்.

கன்னியாகுமரியில் பிரச்சாரம் செய்த ராகுலுக்கு திமுக அமைச்சர் மனோ தங்கராஜ் சால்வை அணிவிக்க வந்தபோது அதை ஏற்க ராகுல் காந்தி மறுத்து விட்டார். அதனால்தான் ராகுல் காந்தியை கடுமையாக எதிர்த்து வரும் பிஹார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோரை கூட்டி வந்து தனது புகழை பாட வைத்துள்ளார் ஸ்டாலின்.

திமுக கூட்டணியில் உள்ள தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, "திமுக ஆட்சியில் பாலியல் வன்கொடுமை, கொலை, கொள்ளை, போதை பொருள் விற்பனை தவிர வேறு என்ன குற்றச்சாட்டுகளை கூற முடியும்?" எனக் கேட்டு ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர வைத்துள்ளார்.

இப்படி திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒவ்வொன்றும் வேண்டா வெறுப்பாக ஏதோ கூட்டணி வைத்தோம். பிரச்சாரம் செய்தோம் என கடைக்கு டீ ஆற்றி வருகின்றன.

திமுக ஆட்சி மீது தமிழக மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். அந்த கோபத்தை ஏப்.23ம் தேதி வியாழக்கிழமை காட்டுவார்கள். இன்னும் 15 நாட்களில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் புதிய ஆட்சி அமையும். திமுக கூட்டணி படுதோல்வி அடையும்” என்று அவர் கூறியுள்ளார்



# கலவையில் அதிமுக வேட்பாளர் எஸ்.எம்.சுகுமார் தீவிர வாக்கு சேகரிப்பு!

ராணிப்பேட்டை ஏப்_22-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தொகுதிக்கு உட்பட்ட கலவை பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும் அஇஅதிமுக வேட்பாளர் எஸ்.எம்.சுகுமார் பேரணியாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பேரணிக்குப் பிறகு பொதுமக்களிடம் பேசிய அவர் கலவை மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு மருத்துவனையின் மருத்துவர் பற்றாக்குறை சரிசெய்து 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் , மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்தப்படும், நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும், நீதிமன்ற கட்டிடங்களை இந்தப் பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.



# வடகரை கிராமம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், ஏப்.22-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை கிராமம் பஜனைக்கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பிரச்னை வெங்கடேச பெருமாள் ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகஸ்தர் சின்னைய ராமானுஜ தாசர், தேவிகா உட்பட ஆலய நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் பந்தக்கால் நடுதல், விக்னேஷ்வரபூஜை, தனபூஜை, கோபூஜை, சங்கல்பம், கணபதி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், வாஸ்துசாந்தி, யாகசாலை பிரவேசபலி, அங்குரார்ப்பணம், துவாரபூஜை, நாடிசந்தானம், பூர்ணாஹீதி, சதுர்வேத பாராயணம் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.பின்னர் மேளதாளத்துடன் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் ஸ்ரீ பிரச்னை வெங்கடேச பெருமாள் மற்றும் விநாயகர், ஆஞ்சநேயர், இராமானுஜர், கருடாழ்வார், கோஷ்டமூர்த்தி விக்ரஹங்களான பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீர் தெளித்தனர். பின்னர் மூலர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். மேலும் உற்சவர்கள் சிறப்பு அலங்காரத்துடன் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது.

# கிருஷ்ணகிரிஅரசு அருங்காட்சியகத்தில்அரசு மகளிர் மாணவிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி, ஏப்.22-

கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் அரசு மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு அருங்காட்சியகம் தொடர்பான பயிற்சி நடந்தது.



கிருஷ்ணகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவிகளுக்கு, 15 நாள் தொழில் சார்ந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் முதல் கட்ட பயிற்சி, கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூரியில் இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு பயிலும் 120 மாணவிகளுக்கு, அருங்காட்சியகம் தொடர்பான பயிற்சி கடந்த 11ம் தேதி துவங்கியது. இதில் ஒரு பகுதியாக மாணவிகள் பழந்தமிழ் எழுத்துக்களை எழுதவும், படிக்கவும் அறிந்து கொள்ள தமிழக தொன்மை இயல் ஆய்வு நிறுவன செயலர் கோவிந்தராஜ், சங்க இலக்கியங்கள் எந்த எழுத்துகளில் எழுதப்பட்டது. அந்த எழுத்துகளின் வளர்ச்சி தொடர்பாக மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். அதனை தொடர்ந்து, தமிழ் எழுத்துகளின் ஆரம்ப வடிவமான குறியீடுகள் மற்றும் தமிழி எழுத்துகளை குறிப்பிட்டு பின் தமிழி எழுத்துகள் எழுதும் முறைகள் பற்றி பயிற்றுவித்தார். இதையடுத்து, பயிற்சியில் பங்கேற்ற மாணவிகள் தங்களின் பெயர்களை 2,500 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்திய தமிழி எழுத்துகளில் எழுதி காண்பித்தனர். 15 நாள் பயிற்சியில் அருங்காட்சியகவியல் தொடர்பாக காப்பாட்சியர் சிவகுமார் பயிற்றுவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் குறித்த விவரங்களை வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணக்குழு செயலர் தமிழ்செல்வன் விவரித்தார். கள ஆய்வு விவரங்களை ஆவணப்படுத்துதல் குறித்து மனோகரன் எடுத்துரைத்தார். வரும் நாட்களில் சுற்றுலா தொடர்பான பயிற்சி யினை மாவட்ட சுற்றுலா அலுவலர் கார்த்திக் வழங்கினார். கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி கல்லூரி மாணவர்கள் அருங்காட்சியகத்தில் வழங்கப்படும் 15 நாள் பயிற்சியினை பயன்படுத்தி கொள்ளுமாறு காப்பாட்சியர் சிவகுமார் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அருங்காட்சியக பணியாளர்கள் செல்வகுமார், பெருமாள் ஆகியோர் செய்திருந்தனர்.

# நீலகிரி மாவட்டத்தில் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குசாவடி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு

நீலகிரி ஏப்.22-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2026 யை முன்னிட்டு, வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னூர் புனித ஜோசப் பள்ளி, 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உதகமண்டலம் ரெக்ஸ் பள்ளியில் நடைபெற்ற மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பினை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் நேரில் பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கினார்கள்.





நீலகிரி மாவட்டத்தில், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி ரெக்ஸ் மேல்நிலைப்பள்ளியிலும், 110குன்னூர் சட்டமன்ற தொகுதி ஜோசப் மேல்நிலைப்பள்ளியிலும், 23 ஏப்ரல் 2026 வாக்குப்பதிவு நாளன்று 736 வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. இதே போன்று 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடலூர் மார்னிங் ஸ்டார் பள்ளியில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இணையதளம் வாயிலாக அறிவுரைகளை வழங்கினார்.

இப்பயிற்சி வகுப்பில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம், வாக்குச்சாவடி அலுவலர்களின் பொறுப்புகள், டெண்டர் வாக்கு கையாளுவது ஆகியவை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது. வாக்குப்பதிவு முந்தைய நாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு முடிந்த பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மாதிரி வாக்குப்பதிவுகள் முடிந்த பின் பின்பற்ற வேண்டிய வழிகள் ஆகியவற்றை நன்றாக தெரிந்திருக்க வேண்டும். மேலும், இப்பயிற்சியில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வதோடு, Ecinet Pro Module app குறித்து நன்றான தெரிந்திருக்க வேண்டும் எனவும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களும் பின்பற்றி, வாக்குப்பதிவு நாளன்று சிறப்பாக பணியாற்ற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா , உதகை வருவாய் கோட்டாட்சியர் தடினு அரவிந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்




# நாக்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை

பல்லாவரம் ஏப்.22-

தேசிய அளவிலான போட்டியில் வெண்கல பதக்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் நாடு முழுவதும் இருந்து நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். கடுமையான போட்டிகளை சமாளித்து சிறப்பாக விளையாடிய செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தை சேர்ந்த இனிய ஹர்ஷினி இந்த சிறுமி, தனது திறமையை நிரூபித்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றினார். உடல் எடையை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் குத்துச்சண்டை பயிற்சியை தொடங்கிய இவர், தொடர்ந்து கடின உழைப்பும், பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலும் காரணமாக தேசிய மட்டத்தில் பதக்கம் வெல்லும் அளவுக்கு உயர்ந்துள்ளார்.மேலும், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், தற்காப்பு கலைகள் பெண்களுக்கு மிகுந்த பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் அளிக்கும் என்பதற்கும் இந்த சாதனை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பார்க்கப்படுகிறது. வெற்றியைத் தொடர்ந்து சொந்த ஊர் திரும்பிய பல்லாவரத்தில் இனிய ஹர்ஷினிக்கு உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் இணைந்து உற்சாக வரவேற்பு அளித்தனர். மேளதாளங்கள் முழங்க, ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்ட அவரை பாராட்டிய மக்கள், இனி வரும் நாட்களிலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துக்கள் தெரிவித்தனர்



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை ஒத்தக்கடை வேளாண்மை கல்லூரியில் மதுரை கிழக்கு மற்றும் மேலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேறபாடு, பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள்ஆய்வு மேற்கொண்டார்.

# தேர்தல் நாளில், டவுன் பஸ்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா பயணம்

கிருஷ்ணகிரி, ஏப்.22-

தேர்தல் நாளில், டவுன் பஸ்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளலாம். இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகிற 23ம் தேதி நடைபெறும் தேர்தலில் அனைத்து தரப்பு மக்களும் வாக்களிப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், பார்வை குறைபாடு மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும், டவுன் பஸ்களில் கட்டணமில்லாமல் பயணம் மேகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுஎனவே 60 வயதிற்கு மேற்பட்ட மூத்தகுடிமக்கள், பார்வை குறைபாடு மற்றும் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தேர்தல் நாளன்று ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் தகவல் சீட்டு அல்லது வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்து டவுன் பஸ்களில் கட்டணமின்றி பயணம் செய்து, தங்களின் வாக்கை செலுத்த மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# தேனி மாவட்டம் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் நேரில் ஆய்வு

தேனி ஏப்.22-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை தேர்தல் பொதுப்பார்வையாளர்கள். பீம் சிங்,. வினய் பிரதாப் சிங்,மற்றும் காவல் பார்வையாளர் .சிவப்பிரகாஷ் தேவராஜ், ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு வருகின்ற 23.04.2026 அன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு, வருகின்ற 04.05.2026 வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. அதனடிப்படையில், வாக்கு எண்ணும் மையத்தில் தபால்வாக்கு எண்ணும் அறைகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனித்தனியாக வைப்பதற்கான பாதுகாப்பு வைப்பறைகள், வாக்கு எண்ணுவதற்கான அறைகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் தேர்தல் பணியாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் செல்லுவதற்கான வழித்தடங்கள் என இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டு முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் தடையில்லா மின்சார வசதி, தேவையான குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக அமைக்கப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்இவ்வாய்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சிேனஹாப்ரியாமாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் /பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் /தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி.)

கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர். சையத் முகைதீன் இப்ராஹிம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்). காசி, உதவி இயக்குநர் (நில அளவை) அப்பாஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், உதவி செயற்பெ பாறியாளர்கள்.சண்முகவேல், சரவணக்குமார், வட்டாட்சியர் (தேர்தல்) சுருளி, வட்டாட்சியர் (தேனி) சதீஸ்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசனை ஆதரித்து
# பம்மல் பகுதியில் மண்டல குழு தலைவர் வே கருணாநிதி முரசு சின்னத்துக்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

பம்மல் ஏப்.22-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் பகுதி தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி இன்று மாலையுடன் பிரச்சாரம் முடிவடைவதால் முடிவடைவதால் வேட்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் வீடு கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் அதன்படி பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் தேமுதிக சார்பில் போட்டியிடும் அனகை முருகேசன் கடந்த 20 நாட்களாக தீவிரமாக முரசு சின்னத்திற்கு ஆதரவு கேட்டு வாக்காளரை சந்தித்து தருகிறார் அதேபோல் கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகளும் முரசு தினத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர் அதன்படி பம்மல் பகுதியில் ஒண்ணாவது மண்டல குழு தலைவர் வே கருணாநிதி தலைமையில் பத்தாவது வார்டுக்கு உட்பட்ட பொன்னி நகர் பகுதியில் முரசு சின்னத்திற்கு ஆதரவு திரட்டி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர் அதனை தொடர்ந்து திருவள்ளுவர் தெரு பகுதியில் வீடு வீடாக சென்று கொண்டு பிரசவங்களை வழங்கி முரசு தினத்திற்கு ஆதரவு அளிக்குமாறு பொதுமக்களே கேட்டுக் கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் பத்தாவது வார்டு மாமன்ற உறுப்பினர் மதினா பேகம், நிர்வாகிகள் ஜான்சன் அப்பாஸ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# ஆப்பிள் சிஇஓ பொறுப்பில் இருந்து டிம் குக் விலகுகிறார்



வாஷிங்டன், ஏப்.22-

ஆப்பிள் நிறுவன சிஇஓ பொறுப்பில் இருந்து டிம் குக் விலக உள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில், அந்த நிறுவனத்தின் அடுத்த சிஇஓ யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கடந்த 2011ல் ஸ்டீவ் ஜாப்ஸ், சிஇஓ பொறுப்பில் இருந்து விலகிய பிறகு அந்த பொறுப்பை ஏற்றார் டிம் குக். அது முதல் ஆப்பிள் நிறுவனத்தின் வருவாய் மற்றும் லாபத்தை அவர் இரட்டிப்பு செய்யும் வகையில் செயல்பட்டார். அதன் பலனை நிறுவனத்துக்கு பெற்று தந்தார். இதனால் நிறுவனத்தின் சந்தை மதிப்பும் உயர்ந்தது.

வரும் செப்.1ம் தேதி அன்று ஆப்பிள் நிறுவனத்தின் அடுத்த சிஇஓவாக ஜான் டெர்னஸ் பதவி ஏற்பார் என அந்நிறுவனம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

சிஇஓ பொறுப்பில் இருந்து விலகுவது குறித்து ஆப்பிள் நிறுவன ஊழியர்களுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். ஆப்பிள் சிஇஓ பணி தன் வாழ்வில் சிறப்பு சேர்த்ததாக அவர் தெரிவித்துள்ளார். புதிய சிஇஓ பொறுப்பேற்றதும் ஆப்பிள் நிறுவன நிர்வாக இயக்குனராக டிம் குக் பணியாற்ற உள்ளார்.

### யார் அடுத்த சிஇஓ?

ஆப்பிள் நிறுவனத்தின் அடுத்த சிஇஓவாக ஹார்டுவேர் இன்ஜினியரிங் பிரிவின் துணை தலைவர் ஜான் டெர்னஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வரும் செப்.1ம் தேதி அவர் அந்த பொறுப்பை ஏற்கிறார் என ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இவர் கடந்த 2001ல் ஆப்பிள் நிறுவனத்தில் பணியில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜப்பானில் 7.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: 80 செ.மீ. உயரத்துக்கு சுனாமி தாக்கியது

டோக்கியோ, ஏப்.22-

வட ஜப்பானில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அங்குள்ள ஒரு துறை முகத்தில் 80 சென்டிமீட்டர் உயரத்துக்கு சுனாமி அலை தாக்கியது.

உலகின் நில அதிர்வு அதிகம் ஏற்படும் நாடுகளில் ஒன்று ஜப்பான். சுமார் 12.5 கோடி மக்கள் வாழும் இந்தத் தீவுக்கூட்டத்தில், ஆண்டுதோறும் சுமார் 1,500 நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், ஜப்பானின் வடக்கு பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.4 அலகுகளாக பதிவானது. இதையடுத்து, கடற்கரையோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதுகுறித்து ஜப்பான் வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், ''நிலநடுக்கம் காரணமாக சுனாமி அலைகள் தாக்கி, சேதம் ஏற்படக்கூடும். எனவே, பொதுமக்கள் கடலோரப் பகுதிகள் மற்றும் ஆற்றங்கரைப் பகுதிகளில் இருந்து உடனடியாக வெளியேறி, உயரமான இடங்கள் அல்லது பாதுகாப்பான கட்டிடங்களுக்குச் செல்ல வேண்டும். சுனாமி அலைகள் மீண்டும் மீண்டும் வரக்கூடும் என்பதால், எச்சரிக்கை திரும்பப் பெறப்படும் வரை பாதுகாப்பான இடங்களை விட்டு வெளியேற வேண்டாம்'' என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவாட் மாகாணத்தில் உள்ள குஜி துறைமுகத்தில் நேற்று மாலை 5:34 மணிக்கு 80 சென்டிமீட்டர் (31 அங்குலம்) உயரத்துக்கு சுனாமி அலை தாக்கியதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக மாலை 5:32 மணிக்கு 70 சென்டிமீட்டர் உயரமுள்ள அலை தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தேசிய ஒளிபரப்பு நிறுவனமான என்எச்கே வெளியிட்ட காட்சிகளில், இவாட் துறைமுகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் உடனடி சேதங்கள் எதுவும் தென்படவில்லை.

பொதுமக்களுக்கு உதவுவதற்காக, பிரதமர் அலுவலகம் அவசரக்கால மேலாண்மைக் குழுவை அமைத்துள்ளது. பிரதமர் சானே டகாயிச்சி செய்தியாளர்களிடம் கூறும்போது, ''எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள், தயவுசெய்து உயரமான மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுங்கள். உயிர்ச்சேதம் அல்லது சொத்துசேதம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதாஎன்பதை ஆய்வு செய்து வருகிறோம்'' என்றார்.

# "அன்புமணி கும்பலை 18 தொகுதிகளிலும் மண்ணைக் கவ்வச் செய்வீர்" ராமதாஸ்



சென்னை, ஏப்.22-

"இந்த ராமதாஸ் தோற்கலாம், ஆனால் துரோகம் ஒருபோதும் ஜெயிக்கக் கூடாது. என் ரத்தமே எனக்கு விஷமானாலும், என் தொண்டர்கள் எனக்கு மருந்தாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அன்புமணி போட்டியிடும் 18 தொகுதிகளிலும் அவரது துரோகக் கும்பலை மண்ணைக் கவ்வச் செய்யுங்கள்" என்று தனது தொண்டர்களுக்கு பாமக நிறுவனர் ராமதாஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "நேற்று நான் வெளியிட்ட வீடியோவைப் பார்த்துப் பலரும் கண்ணீர் வடித்தீர்கள். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் மரண வேதனை எனக்கு மட்டுமே தெரியும்.

எப்போது அன்புமணி என் பேச்சைக் கேட்காமல், என் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுப் பணத்துக்காக அலையத் தொடங்கினாரோ, அன்றே ஒரு தந்தையாக நான் செத்துவிட்டேன். உங்களுக்காக நான் சிறை சென்றேன், ரத்தம் சிந்தினேன்; ஆனால் அன்புமணி இன்று அந்த ரத்தத்தைச் 'சமூக நீதி வியாபாரம்' ஆக மாற்றி விட்டார். ஒவ்வொரு தேர்தல் சீட்டையும் பல கோடிகளுக்கு விற்று, நம் சமுதாயத்தின் உரிமைகளை அன்புமணி அடகு வைத்துவிட்டார். பெற்ற அப்பனையே கவனிக்காத ஒருவர், உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை வாங்கித் தருவாரா? தன் மனைவியையும் மகளையும் அதிகாரத்துக்காகப் பயன்படுத்தும் இவர், சாதாரணப் பாட்டாளிப் பெண்களுக்கு என்ன நன்மையைத் தருவார்? தருமபுரியில் சவுமியா வெற்றி பெற்றால், அந்தப் புண்ணிய பூமி விரைவில் 'அதர்மபுரி' என்று பெயர் எடுக்கும். அரசியலில் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், முதல்வர் ஸ்டாலின் தன் தந்தை கருணாநிதி சாகும் வரை கூடவே இருந்து கவனித்துக் கொண்டார். இன்று உதயநிதி தன் தந்தையைக் கவுரவப்படுத்துகிறார்.

ஆனால், எனக்கு வாய்த்த பிள்ளையோ, நான் உயிரோடு இருக்கும்போதே என்னைச் செத்துப்போனதாக நினைத்து அரசியல் பண்ணுகிறார். இதை விட ஒரு தகப்பனுக்குப் பெரிய அவமானம் என்ன இருக்க முடியும்?

மாம்பழம் இனிக்கும் என்று இனி நம்பாதீர்கள். அந்தச் சின்னத்துக்குள் இப்போது துரோகம் எனும் விஷம் ஏறிவிட்டது. அந்த விஷத்தை முறியடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அன்புமணியின் துரோகக் கும்பலுக்கு ஓட்டுப் போடுவது, உங்கள் பெற்ற தகப்பன் தலையிலேயே நீங்கள் மண்ணள்ளிப் போடுவதற்குச் சமம்.

இந்த ராமதாஸ் தோற்கலாம், ஆனால் துரோகம் ஒருபோதும் ஜெயிக்கக் கூடாது. என் ரத்தமே எனக்கு விஷமானாலும், என் தொண்டர்கள் எனக்கு மருந்தாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அன்புமணி போட்டியிடும் இந்த 18 தொகுதிகளிலும் அவரது துரோகக் கும்பலை மண்ணைக் கவ்வச் செய்யுங்கள். தர்மம் ஜெயிக்கட்டும்!" என்று ராமதாஸ் உருக்கமாக கூறியுள்ளார்.



■ இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேர்தல் பொது பார்வையாளர்கள் சுனில்குமார் சிங் இ.ஆ.ப., மரு.பிரீத்தி கோயல் இ.ஆ.ப., காவல் பார்வையாளர் நிலாப்ஜா சௌத்ரி இ.கா.ப., ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 பணியில் ஈடுபட உள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள் (3rd Random-ization), காவல் பாதுகாப்பு படையினர் (Police Personnel Randomization), தேர்தல் நுண் பார்வையாளர்கள் (3rd Randomization) ஆகியோர்களை வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிவதற்கான கணினி குலுக்கள் முறையில் பணி ஒதுக்கீடு செய்வதை மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெ.சிபின் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் பேபி இந்திரா மற்றும் பலர் உள்ளனர்.

# "ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது தமிழகம்" பழனிசாமி காட்டம்

சென்னை, ஏப்.22-

"ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றிவிட்டனர்" என கடுமையாக விமர்சித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ வெளியிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் நிலையில், அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. இன்று மாலையுடன் பிரச்சாரம் முடிவடைய இருக்கும் நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோ பதிவில், "வாக்குரிமை நம் தலையெழுத்தை மாற்றும் ஜனநாயக ஆயுதம். வருகிற 23ஆம் தேதி நாம் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றிவிட்டனர்.

சட்டம் ஒழுங்கு அடியோடு சீர் கெட்டுவிட்டது. பெண்களுக்கு எங்கேயும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. உயர் கல்வித் துறையை சீரழித்து விட்டனர். சந்து பொந்துகளில் எல்லாம் கஞ்சா போதை பொருட்களை விற்று மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டனர். இந்த அராஜக, குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட உங்கள் வாக்கு தேவை.

குடிமரமரத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை மீட்டெடுத்தது, அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கியது, அம்மா உணவகம், அம்மா மினி கிளினிக் என பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றியது அதிமுக அரசு.

இந்த மக்கள் நல திட்டங்கள் மீண்டும் தொடர வேண்டும். சிறப்பான நமது தேர்தல் அறிக்கையின் மூலம் வளமான ஒரு எதிர்காலத்தை தமிழகத்துக்கு வழங்க இருக்கின்றோம். அதன் மூலம் தமிழகம் இன்னும் முன்னேற்றப் பாதையில் செல்லும். அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அதிக வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெறும்" என்று பழனிசாமி பேசியுள்ளார்.

# "எத்தனை கேஜ்ரிவால், ராகுல் வந்தாலும் தமிழகத்தில் என்டிஏ வெற்றியைத் தடுக்க முடியாது" தமிழிசை

சென்னை, ஏப்.22-

"தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த் கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.மயிலாப்பூர் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழிசை இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "நாங்கள் ஓட்டுக் கேட்டு மட்டும் செல்லவில்லை. அந்தந்தப் பகுதியில் உள்ள பிரச்சினைகளை குறித்து வைத்துள்ளோம். வெற்றி பெற்ற நூறு நாட்களில் அப்பகுதி மக்களின் அடைப்படை தேவைகளை பூர்த்தி செய்வோம். மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தயாராக இருக்கிறேன். பல இடங்களை தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இவை அனைத்தும் சரி செய்யப்படும். எத்தனையோ தேர்தல்களை நான் சந்தித்துவிட்டேன். நாங்களும் கட்சியுடன் சேர்ந்து வளர்ந்து வருகிறோம். தற்போது எனக்கு மயிலாப்பூர் மக்கள் வாக்களிக்க வேண்டும். மீனவ பெண்களுக்கு தனி திட்டம் வைத்துள்ளேன். திமுகவின் கவுன்டவுன் ஆரம்பித்துவிட்டது. தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது. அமித் ஷாவின் ரோடு ஷோ நல்ல விதமாக அமைந்தது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தேனி மாவட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தக்கூடிய தேர்தல் உபகரணங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் ஆய்வு



தேனி ஏப்.22-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, ஆண்டிபட்டி மற்றும் பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகங்களில் தேர்தல் உபகரணங்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதனடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள தேர்தல் உபகரணங்களை தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள 344 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 360 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 346 வாக்குச்சாவடி மையங்களுக்கும், 201.கம்பம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடி மையங்களுக்கும் என மொத்தம் 1395 வாக்குச்சாவடி மையங்களுக்கு பிரித்து வழங்கப்படும்.

அதன்படி, ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், படிவங்கள், பதிவேடுகள், உறைகள், அடையாள அட்டைகள், அழியா மை, வாக்காளர் பட்டியல், வாக்குப்பதிவு முடிவுற்றபின் மின்னணு வாக்குப்பதிவு பெட்டிகளில் சீலிடுவதற்கு மெழுகுவர்த்தி, மெடல் சீல், முகவரி அட்டைகள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட தேர்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 20க்கும் மேற்பட்ட எழுதுபொருட்களும் அடங்கும். அதனடிப்படையில் இன்று ஆண்டிபட்டி மற்றும் பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து 198.ஆண்டிபட்டி மற்றும் 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு தேர்தல் உபகரணங்களை பிரித்து கொண்டு செல்லும் பொருட்டு, தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர்கவிதா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள்.ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி). மருதுபாண்டி (பெரியகுளம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டிருக்கும் பசுமை வாக்குசாவடி மையத்தில் (Green Booth) நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இதில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

## காளையார்கோவில் பெரியகண்ணனூரில் கருணாஸ் க்கு வழக்கறிஞர் வி எம்.ஆசைத்தம்பி வெண்கல வாள் வழங்கி வரவேற்பு

சிவகங்கை ஏப்.22-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர். முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது.கருணாஸ் கிட்டத்தட்ட தொகுதி முழுவதும் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்... இதனிடையே நேற்று காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் காளையார்கோவில் தெற்கு ஒன்றியப் பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்... இதனிடையே திமுக பிரமுகரும் ஓபிஎஸ் அணி மாவட்ட நிர்வாகியுமான தேவகோட்டை வழக்கறிஞர் வி.எம். ஆசைத்தம்பி . ஏற்பாட்டில் வேட்பாளர் கருணாஸ் க்கு



சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.. இதனிடையே கழக இரு வண்ணக் கரை வேட்டியை அணிவித்து . வெண்கல வாளை கருணாஸ் கைகளில் வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தார்... இதனிடையே பெண்கள் பலரும் ஆரத்தி எடுத்து குலவையிட்டனர்..

அப்போது வேட்பாளர் கருணாஸ் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்..

இந்த நிகழ்ச்சியின் போது துணைச் செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி. அவைத் தலைவர் வரதராஜன். பொருளாளர் வழக்கறிஞர் வெட்டிக்குளம் வெங்கடேஷ். நிர்வாகிகள் தோக்கப்பன் . நவநீதக்கிருஷ்ணன் . திருநாவுக்கரசு . உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

## தேர்தல் விதிகளை முறையாக பின்பற்றுதல் வேண்டும்

சிவகங்கை, ஏப்.22-

சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற 23.04.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, நேற்று 21.04.2026 மாலை 06.00 மணிக்கு பின்னர் அரசியல் கட்சியினரும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் இந்திய தேர்தல் ஆணையத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளை முறையாக பின்பற்றுதல் வேண்டும் தேர்தல் நடவடிக்கை தொடர்பாக அனைத்து பிரச்சாரங்களும் மேற்கொள்ள தடை விதிக்கப்படுகிறது. இக்காலகட்டத்தின் போது, ஒலி பெருக்கிகள் பயன்படுத்துதல் கூடாது. இதர மாவட்டங்களிலிருந்தோ அல்லது இதர பகுதிகளிலிருந்தோ



அரசியல் கட்சியினரின் பிரச்சாரத்துக்காக அழைத்து வரப்பட்ட, குறிப்பிட்ட பாகத்திற்கான வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களும், இதர அரசியல் பணியாளர்களும் அந்தந்த பகுதிகளில் தங்குவதற்கு அனுமதி இல்லை. மேலும், அனைத்து திருமண மண்டப உரிமையாளர்கள், தங்கும் விடுதி உரிமையாளர்கள், சமுதாயக்கூட உரிமையாளர்கள் வெளியூர் நபர்களை தங்களது மண்டபங்களிலோ, விடுதிகளிலோ, சமுதாயக் கூடங்களிலோ தங்குவதற்கு அனுமதித்தல் கூடாது. அச்சு அல்லாது மின்னணு ஊடகங்களில் தேர்தல் முடிவுகள் தொடர்பாக கருத்துக்கணிப்போ (Opinion Poll) அல்லது வாக்களித்த பின்னர் கருத்துக்கணிப்பு (Exit Poll) முடிவுகளோ வெளியிடக்கூடாது. சான்றிதழ் பெறப்படாமல் எவ்வித தேர்தல் விளம்பரங்களும் வெளியிட தடை செய்யப்படுகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட் ஆட்சியர் கா.பொற்கொடி, அறிவித்துள்ளார்..




■ செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏழு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இறுதி கட்டமாக இந்திய தேர்தல் ஆணைய இணைய செயலியின் மூலம் கணினி சுழற்சி முறையில் (Randomization) ஒதுக்கீடு செய்யும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், தலைமையில் நடைபெற்றது. இதில் தேர்தல் பொது பார்வையாளர்கள், தேர்தல் காவல் பார்வையாளர், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கணேஷ் குமார், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) .ஸ்ரீதேவி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மானாமதுரை ஆனந்தவல்லி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலத் தொடக்கம்!

மானாமதுரை ஏப்.22-

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட பிரசித்தி பெற்ற மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சமேத சோமநாத சுவாமி திருக்கோயிலில், இந்த ஆண்டிற்கான சித்திரைத் திருவிழா (சைத்ரோத்சவம்) நேற்று காலை மிகச் சிறப்பான முறையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.திருவிழா விபரங்கள்:பஞ்சமூர்த்திகள் மற்றும் அம்பாள், சுவாமி முன்னிலையில் வேத மந்திரங்கள் முழங்க, கோயில் கொடி மரத்தில் திருவிழா கொடி ஏற்றப்பட்டது. முன்னதாக கொடி மரத்திற்கு சிறப்பு அபிஷேகங்களும், ஆராதனைகளும் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள்



கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். முக்கிய நிகழ்வுகள்:நேற்று (ஏப்ரல் 21) தொடங்கிய இந்த உற்சவம் வரும் மே 1ஆம் தேதி வரை 11 நாட்கள் நடைபெற உள்ளது. விழாவின் முக்கிய அம்சங்களாக:

தினசரி வாகன சேவை: ஒவ்வொரு நாளும் காலை மற்றும் இரவு வேளைகளில் அம்பாளும், சுவாமியும் பூத வாகனம், சிம்ம வாகனம், காமதேனு வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வருவர். திருக்கல்யாணம்: ஏப்ரல் 28ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10:35 மணி முதல் 11:00 மணிக்குள் சுவாமி அம்பாள் திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது. திருத்தேரோட்டம்: ஏப்ரல் 29ஆம் தேதி (புதன்கிழமை) காலை 5:30 மணிக்கு மேல் தேரோட்டம் மிக விமரிசையாக நடைபெற உள்ளது. அழகர் ஆற்றில் இறங்குதல்: விழாவின் நிறைவாக மே 1ஆம் தேதி வைகை ஆற்றில் அழகர் இறங்கும் நிகழ்வு நடைபெறுகிறது.இந்த ஆண்டு திருவிழாவின் சிறப்பம்சமாக, பல தலைமுறைகளுக்குப் பிறகு ஆனந்தவல்லி அம்மன் மற்றும் சோமநாத சுவாமி ஆகிய இருவருக்கும் தனித்தனியாக இரண்டு பெரிய தேர்கள் தயார் செய்யப்பட்டு, இந்த முறை இரண்டு தேரோட்டங்கள் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தான நிர்வாகத்தினர் மற்றும் மானாமதுரை ஊர் பொதுமக்கள் செய்து வருகின்றனர்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருள்மிகு ஆனந்த வல்லி அம்மன் கோயில் அருகே வைகையாற்றுக்கு செல்லும் வழியில், பசுமை செயல் குழு சார்பில் கொளுத்தும் வெயிலால் அவதிப்படும் பொதுமக்களின் உடல் சூட்டை தணிக்கும் வகையில் நேற்று பத்தாம் நாள் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில், வழியாக சென்ற ஏராளமான ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் மோர் பருகி பயனடைந்தனர். வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களுக்கு இதுபோன்ற தண்ணீர் மற்றும் மோர் தயிர் சாதம் வழங்கும் பணிகள் பாராட்டுக்குரியதாக உள்ளதாக மக்கள் தெரிவித்தனர்



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்ரு2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வாக்குச்சாவடி மையத்தில் பணிபுரிய உள்ள நுண் பார்வையாளர்கள் (Micro Observer)வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலை1, நிலை2, நிலை3 மற்றும் காவல்துறையினர் ஆகியோர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தேர்தல் பொதுப் பார்வையாளர்கள்சமர்த் வர்மா, இ.ஆ.ப.,(188 மேலூர் மற்றும் 189 மதுரை கிழக்கு) வேத் பதி மிஸ்ரா, இ.ஆ.ப.,(190 சோழவந்தான், 197 உசிலம்பட்டி) அந்தரா ஆச்சார்யா, இ.ஆ.ப.,(191 மதுரை வடக்கு, 194 மதுரை தெற்கு) தினேஷ் குமார், இ.ஆ.ப.,(193 மதுரை மத்திய, 194 மதுரை மேற்கு)மிங்மா டி. ஷெர்பா, இ.ஆ.ப.,, (195–திருப்பரங்குன்றம் மற்றும் 196–திருமங்கலம்)ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,,மாநகர காவல் ஆணையாளர் அபிஷேக் தீக்சித்,இ.கா.ப.,,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப., ஆகியோர் முன்னிலையில்மூன்றாம்/இறுதி கட்ட சுழற்சி முறை (Randomization) மேற்கொள்ளப்பட்டு, அச்சிடப்படும் பணியினை பார்வையிட்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு எண்ணிக்கை மையம் அமைக்கப்பட்டுள்ள முத்தனம்பட்டி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் .செ.சரவணன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப், . கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் . இரா.ஜெயபாரதி . உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.ச.வினோதினி. திண்டுக்கல் தேர்தல் நடத்தும் அலுவலர் கோ.பழனிவேல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

## ஆம்பூர் அருகே பாலூரில் அதிமுகவைச் சேர்ந்தவரிடம் ரூ.3.06 லட்சம் பறிமுதல்

ஆம்பூர், ஏப்.22-

ஆம்பூர் அருகே பாலூரில் அதிமுகவைச் சேர்ந்தவரிடம் ரூ.3.06 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. ஆம்பூரைச் சேர்ந்த ரஞ்சித் என்பவரிடம் ரூ.3.06 லட்சத்தை தேர்தல் பறக்கும்படை பறிமுதல் செய்தது. வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்வதாக வந்த புகாரில் அதிகாலையில் சோதனை நடத்தினர். பணத்துடன் பிடிபட்ட அதிமுகவைச் சேர்ந்தவரிடம் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்

## திமுக பணத்தை நம்பி தேர்தலில் நிற்கிறது , நான் மக்களை நம்பி தேர்தலில் நிற்கிறேன் : டாக்டர் சரவணன்

மதுரை, ஏப்.22-

மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் டாக்டர் பா.சரவணன், "திமுக பணத்தை நம்பி தேர்தலில் நிற்கிறது; நான் மக்களை நம்பி நிற்கிறேன்" என்று கடுமையாக விமர்சித்தார். நடிகர்கள் ரவி மரியா, கஞ்சா கருப்பு ஆகியோருடன் செய்தியாளர்களை சந்தித்த அவர், வாக்காளர்கள் "பணமா? குணமா?" என்பதை வைத்து சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

திமுக அரசு 2021ஆம் ஆண்டு வழங்கிய 505 வாக்குறுதிகளில் 15% மட்டுமே



நிறைவேற்றியுள்ளதாக குற்றம்சாட்டிய அவர், நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என கூறியதும் நிறைவேறவில்லை என்றார். அதிமுக ஆட்சியில் 7.5% ஒதுக்கீட்டு திட்டம் மூலம் 3600 மாணவர்கள் பயனடைந்ததாகவும் குறிப்பிட்டார். மேலும், மதுரை வடக்கு தொகுதியில் குடிநீர், பாதாள சாக்கடை போன்ற அடிப்படை திட்டங்கள் நிறைவேறவில்லை என்றும், திமுக ஆட்சியில் வரி மற்றும் கட்டணங்கள் அதிகரித்துள்ளதாகவும் விமர்சித்தார்.

திமுக வேட்பாளர் மீது பணம் வழங்கி வாக்குகள் பெற முயற்சிக்கிறார் என குற்றம் சாட்டிய அவர், "₹1,500 வாங்குவது நாள் ஒன்றுக்கு 82 பைசா மட்டுமே; அதற்காக விலை போக வேண்டுமா?" என கேள்வி எழுப்பினார்.

"தராசு போல அதிமுக, திமுகவை மக்கள் நிறுத்தி பார்த்து வாக்களிக்க வேண்டும். நான் மக்களை நம்பி நிற்கிறேன்" என்று டாக்டர் சரவணன் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161